بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 30/10/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

மாநபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்களின் ஈமானை வலுப்படுத்தும் எடுத்துரைப்பு - போதும் என்ற மனப்பாண்மை மற்றும் எளிமை தொடர்பாக

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ اَلرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

மாநபி (ஸல்) அவர்களின் எளிய வாழ்க்கை மற்றும் அன்னாரது எளிய வாழ்வியல் முறை பற்றி குறிப்பிடப்பட்டு வந்தது. இதுகுறித்து கடந்த வாரம் அன்னாரின் உணவு முறையின் எளிமை மற்றும் உணவருந்தும் முறை பற்றி விவரித்திருந்தேன். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் எளிய வாழ்க்கை முறையின் தரம் எந்த அளவுக்கு உயர்ந்ததாக இருந்தது என்பதைப் பற்றி இன்று மேலும் சிலவற்றை எடுத்துரைப்பேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒவ்வொரு செயலும் ஓர் எளிய தன்மையையும் பகட்டில்லா வடிவத்தையும் தன்னகத்தே கொண்டிருந்தது. மிகச் சிறந்த உணவுகளை உண்பவர்களோ, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் மிக மிக உன்னதமான உணவுகளை உண்டிருப்பார்கள் என்றும், அரசபோக உணவு விரிப்பு அன்னாருக்கு முன்னால் விரிக்கப்பட்டிருக்கும் என்றும் நினைத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால், உண்மை நிகழ்வுகள் இதற்கு முற்றிலும் மாறானவையாக இருந்தன என்பதையறிந்து அவர்கள் மலைத்துப்போவார்கள். ஒருபுறம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எளிமையின் முழுமையான முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள் என்றால், மறுபுறம் எளிய வாழ்வை வாழ்வதிலும், அன்னார் உலகிற்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தம் சகோதரி மகனான உர்வா அவர்களிடம், 'என் சகோதரி மகனே! நாங்களோ ஒரு பிறைக்குப் பிறகு அடுத்த பிறை என மூன்று பிறைகள் வரை பார்த்து விடுவோம் - அதாவது, இரண்டு சந்திர மாதங்கள் கழிந்து விடும் - ஆனாலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இல்லத்தில் அடுப்பு எரியாது' என்று கூறினார்கள்.

கேள்வி எழுப்பியவர், 'பிறகு, நீங்கள் எல்லாம் என்ன செய்வீர்கள்?' என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், 'பேரீச்சம்பழத்தையும், தண்ணீரையும் உட்கொள்வோம். மேலும், அன்ஸாரிகளான அண்டை அயலார் ஆட்டுப்பாலையும் அனுப்புவார்கள்' என்று பதிலளித்தார்கள்.

அல்லாஹ்! அல்லாஹ்! எத்தகைய எளிய வாழ்க்கை! இரண்டு மாதங்கள் வரை அடுப்பே எரிக்காமல், வெறும் பேரீச்சம்பழம், தண்ணீர் மற்றும் பாலைக் கொண்டு

மட்டுமே வாழ்க்கை நடத்தியிருக்கிறார்களே! இந்த வரலாற்றைக் கண்டு முஸ்லிம்கள் வெட்கப்பட வேண்டும். முஸ்லிம்களிலும் உள்ள சில செல்வந்தர்கள் இன்றைய காலத்தில் உண்ணுதல், பருகுதல் எனும் இதே நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து, குறைந்த வசதியுடைய மக்களும் அதிகமாக செலவிட முயற்சி செய்கிறார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'முஸ்லிம்களின் பணம் உண்பதிலும் பருகுவதிலுமே அதிகம் செலவாகிவிடுகிறது, பின்னர் கடனாளிகளாக இருக்கிறார்கள்.'

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: தற்காலத்தில் எங்களது உணவுத்தரம் நன்றாக இல்லை எனக் கோரிக்கைகள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. ஆனால், வருகின்ற வருமானத்தைக் கொண்டு வாழ்வைக் கழிக்க வேண்டும். *ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* மாநபி (ஸல்) அவர்கள் ஒருபுறம் எளிமையின் முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள் எனில், மறுபுறம் துறவறத்தையும் அன்னார் விரும்பவில்லை. உயர்ந்ததிலும் உயர்ந்த உணவு சமர்ப்பிக்கப்பட்டாலும், அதையும் பயன்படுத்தியுள்ளார்கள். ஆன்மாவை ஒடுக்குதல் என்ற பெயரில் உணவை மறுத்துவிட மாட்டார்கள். இந்த உயர்த்தரமே பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மற்றவர்களை விடச் சிறப்பினை அளிக்கிறது. ஏனெனில், ஹுஸூர் (ஸல்) அவர்கள் அகில உலகிற்குமாகத் தோன்றினார்களே அன்றி, ஏதேனும் ஒரு குறிப்பிட்ட குழுவிற்காக அல்ல. எனவே, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் முழுமையானவராக இருப்பது அவசியமானதாக இருந்தது.

ஒருபுறம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எளிமையான வாழ்வை வாழ்வதில் முழுமை பெற்றிருந்தார்கள் எனில், மறுபுறம் தூய்மையான பொருள்களைப் பயன்படுத்துவதிலிருந்தும் தவிர்ந்திருக்க மாட்டார்கள். ஆயினும், பொதுவாக நபி (ஸல்) அவர்களது வாழ்வைக் கழித்தல் எளிய தன்மையிலேயே அமைந்திருந்தது. மேலும், வாழ்வின் பிணைப்பு தொடர வேண்டும்; பணியாற்றுவதற்கான ஆற்றல் உருவாகிக் கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காகவே உணவருந்தினார்கள். மாநபி (ஸல்) அவர்கள் தம் வாழ்க்கையில் அனைத்து வகையான உயர்தர உணவுகளையும் உட்கொள்ளும் முன்மாதிரியையும் காட்டியுள்ளார்கள்; அதேவேளையில், உயர்தர உணவையும் ஆடம்பர ஆடைகளையுமே தம் வாழ்வின் முதன்மை நோக்கமாகக் கொண்டிருக்கும் நம்முடைய செல்வந்தர்களுக்கும், எளிய வாழ்க்கையின் மூலம் முன்மாதிரியை நிலைநாட்டி விட்டார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: நல்ல உணவுகளை உட்கொள்வது தொடர்பாக ஓர் அறிவிப்பு உள்ளது, பெருமானார் (ஸல்) அவர்கள் ஆட்டின் தோள்பட்டை பகுதியிலிருந்து இறைச்சியை உண்டு கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கத்தியால் இறைச்சியை வெட்டி உண்டுள்ளார்கள். உம்மத்தினருக்குச் சிரமம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே அன்னார் இச்செயலைச் செய்தார்கள். நியாயமான தேவைகளின் அடிப்படையில் இவ்வாறு உண்பது அனுமதிக்கப்பட்டது. ஆயினும், முற்றிலுமாக அதையே கடைபிடிப்பதும், அதில் ஆடம்பரம் காட்டுவதும், (உண்பதற்கான) பிற வழிமுறைகளைக் தாழ்வாகக் கருதுவதும் தடுக்கப்பட்டுள்ளது. பிற சமூகத்தினரைப் பின்பற்றத் தொடங்கினால், மனிதன் தூய்மையையும் கைவிட்டு விடுகிறான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் சில வேளைகளில், வேலை செய்து கொண்டிருக்கையில் மேசையில் வைத்தும் உணவு உண்டு கொள்வார்கள்; தரையில் அமர்ந்தும் உண்டு கொள்வார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:- ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் திருமணம் மற்றும் வலீமா விருந்து பற்றி அறிவிப்பில் பின்வருமாறு உள்ளது: கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃபியா (ரலி) அவர்களை விடுதலை செய்துவிட்டு, அவர்களைத் திருமணம் செய்து கொண்டார்கள். அவர்கள் விடுதலை அடைந்ததே அவர்களுக்குரிய மஹராக இருந்தது. இந்தப் பயணத்திலேயே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலை வேளையில் உணவு விரிப்பை விரித்துவிட்டு அனைவரிடமும், "எவரிடம் ஏதேனும் (உணவுப் பொருள்) இருக்கிறதோ, அவர் அதைக் கொண்டு வரட்டும்" என்று கூறினார்கள். ஒருவர் பேரீச்சம்பழங்களைக் கொண்டுவர, ஒருவர் நெய்யையும், ஒருவர் சத்து மாவையும் கொண்டு வந்தார். பிறகு, அவை அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்துப் பிசைந்தார்கள். இதுவே மாநபி (ஸல்) அவர்களின் வலீமா விருந்தாக இருந்தது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:- அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொருவரின் (விருந்து) அழைப்பையும் ஏற்றுக்கொள்வார்கள். ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: 'தையற்கலைஞர் ஒருவர் ஹுஸூர் (ஸல்) அவர்களை விருந்துக்கு அழைத்தார்.' ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் மேற்கொண்டு கூறுகிறார்கள்: 'நானும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் விருந்துக்குச் சென்றேன். அவர் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் பார்லி ரொட்டியையும்; சுரைக்காயும், காய்ந்த இறைச்சித் துண்டுகளும் இடப்பட்ட குழம்பையும் பரிமாறினார்.' ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் கிண்ணத்தின் ஓரங்களிலிருந்து சுரைக்காய்த் துண்டுகளைத் தேடித்தேடி உண்பதை நான் கண்டேன். அன்றிலிருந்து நானும் சுரைக்காயை விரும்பத் தொடங்கினேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: மாநபி (ஸல்) அவர்களுக்கு சுரைக்காய் மிகவும் விருப்பமானதாக இருந்தது. பிறகு, மாநபி (ஸல்) அவர்களுக்கு உணவு கிடைக்காத ஒரு காலமும் வந்தது. எனவே, 'முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஏன் நல்ல இறைச்சியைச் சாப்பிட்டார்கள்?' என்று கேட்பவன் அறிவீனன் ஆவான். 'முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உயர்தரமான தேன் பானங்களை ஏன் அருந்தினார்கள்; நல்ல உணவுகளை ஏன் உண்டார்கள்?' என்று கேட்பவனும் அறிவீனன் ஆவான். ஏனெனில், முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பட்டினியும் கிடந்தார்கள்; (பசியால்) தமது வயற்றில் துணியையும் கட்டியிருந்தார்கள் என்பதை அவன் காண்பதில்லை.

நபிநாதர் (ஸல்) அவர்களின் வாழ்வில் எத்தகைய நாளும் வந்துள்ளது என்றால், ஓர் ஏழைப் பெண் அன்னாரது வீட்டிற்கு யாசகம் கேட்க வந்தபோது, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'அன்று எங்கள் இல்லத்தில் நாங்கள் உண்பதற்கும் ஒன்றுமே இருக்கவில்லை. தேடிப் பார்த்தபோது ஒரே ஒரு பேரீச்சம்பழம் மட்டுமே கிடைத்தது. அந்தப் பெண் அந்தப் பேரீச்சம்பழத்தை இரண்டு துண்டுகளாக ஆக்கித் தன்னுடைய இரண்டு பெண் குழந்தைகளுக்கும் கொடுத்துவிட்டாள்.' ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இந்த நிகழ்வினைப் பற்றி பெருமானார் (ஸல்) அவர்களிடம் குறிப்பிட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "ஒருவரது இல்லத்தில் இரண்டு பெண்

குழந்தைகள் இருந்து, அவர் அவர்களைச் சிறப்பாகப் பரமாரித்து வளர்த்தால், அல்லாஹ் அவருக்குச் சுவனத்தைக் கட்டாயமாக்கி விடுகிறான்" என்று கூறினார்கள்.

ஹுஸைர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஒருவர் கேட்க்கும்போது அல்லது படிக்கும்போது அதில் எடுத்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நிகழ்விலும் தர்பிய்யத், நுட்பஞானம் மற்றும் அறிவுரை ஆகியவற்றிற்கான பல அம்சங்கள் காணப்படுகின்றன. இந்த அறிவிப்பிலும் இதுவே நமக்குத் தென்படுகிறது.

ஹுஸைர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:- தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன் நூலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் உண்பதிலும் பருகுவதிலும் எளிமையைக் கடைப்பிடித்து வந்தார்கள். எப்பொழுதாவது (உணவில்) உப்பு அதிகமாகிவிட்டாலோ, உப்பு இல்லாமற்போனாலோ அல்லது உணவு சரியாகச் சமைக்கப்படாமல் இருந்தாலோ, அன்னார் ஒருபோதும் விருப்பமின்மையை வெளிப்படுத்த மாட்டார்கள். இயன்றவரை அன்னார் அத்தகைய உணவை உட்கொண்டு, உணவை சமைத்தவர் மனம் புண்படுவதிலிருந்து பாதுகாக்க முயற்சி செய்வார்கள். ஆயினும், முற்றிலுமாக சகித்துக்கொள்ள முடியாத அளவுக்கு இருந்தால், அன்னார் உண்பதை மட்டும் தவிர்த்துக் கொள்வார்களேயொழிய, அதை வெளிப்படுத்த மாட்டார்கள். ஏதேனும் உணவுப் பொருள் வந்தால், சஹாபாவுடன் பங்கிட்டு உண்பார்கள். ஒருமுறை பேரீச்சம்பழங்கள் வந்தபோது, அன்னார் சஹாபாவுக்குத் தலா ஏழு பேரீச்சம்பழங்களைப் பங்கிட்டுக் கொடுத்து விட்டார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: 'நபிநாதர் (ஸல்) அவர்கள் எவரையும் ஏசியதை நான் ஒருபோதும் கண்டதில்லை; மேலும், அன்னாருக்கென்று எந்தவோர் ஆடையுமே மடித்து வைக்கப்பட்டதுமில்லை.' அதாவது, ஒரேயொரு ஜோடி மட்டுமே இருக்குமே அன்றி, மடித்து வைப்பதற்கு இன்னொரு ஜோடி ஆடைகள் இருக்காது. ஆடைகளைத் துவைப்பது அவசியமாகும்போது, அப்படியே துவைத்து (அணிந்து) வெளியே செல்வார்கள்; நீரின் அடையாளமும் ஆடைகளில் தென்படும். இது எளிமையின் எத்தகைய முன்மாதிரி என்றால், இந்த முன்மாதிரியை எந்த வசதிபடைத்தவராலும் காட்டவும் முடியாது; எவரும் காட்டியதும் கிடையாது.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதாரித் தமீமீ என்பவர் ஒரு வரிகளுள்ள பட்டு ஆடையை சந்தையில் விற்பதைக் கண்டார்கள். இவர் அரசகர்களிடம் சென்று பரிசுகளைப் பெற்று வந்தவர் ஆவார். இதைக்கண்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'யா ரஸூலல்லாஹ்! {(ஸல்)} அதாரித் இத்தகைய ஆடையை விற்பதை நான் கண்டேன். பிரதிநிதிக்குழுவினர் தங்கள் முன் ஆஜராகும்போது, தாங்கள் அதை அணிந்து கொண்டால், அதனால் நல்ல தாக்கம் ஏற்படுமே!' என்று கூறினார்கள். 'தாங்கள் அதை ஜுமுஆ நாளன்றும் அணிந்து கொள்ளலாமே' என்றும் கேட்டுக் கொண்டதாக அறிவிப்பாளர் கூறுகிறார். அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், 'மறுமையில் (நற்கூலிக்கான) எந்த பங்கும் அற்றவர்தான் இந்த உலகில் பட்டு ஆடையை அணிவார்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த நிகழ்வுகளைப் பற்றி குறிப்பிட்டு விட்டு கூறுகிறார்கள்: உடைகளில் மாநபி (ஸல்) அவர்கள் எந்த அளவுக்கு எளிமையைக் கடைப்பிடித்து வந்தார்கள் என்றால், உண்மையில் இந்த நிலைமைகளைப் படித்து எனக்கு வெட்கமாக இருக்கிறது. இப்பொழுது நிலைமைகள் மாறிவிட்டனதான்; பிறகும், இந்த நிகழ்வுகளைப் படித்து வெட்கம் ஏற்படுகிறது. ஆடைகளில் ஏற்பட்டுள்ள வித்தியாசத்தை எடுத்துவிட்டு பார்த்தாலும்கூட, பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை மிகவும் எளிமையானதாக இருந்தது. அது இல்லாமல் உலகின் முன்னேற்றத்திற்கான ஏற்பாடு ஆகியிருக்கவே முடியாது.

ஹஸ்ரத் சும்ரா பின் ஜுந்துப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், "வெள்ளை ஆடைகளை அணியுங்கள்; ஏனெனில், இவை மிகவும் தூய்மையானவையும் அதிகம் உன்னதமானவையும் ஆகும். மேலும், இதிலேயே உங்கள் மரணித்தவர்களுக்கு கஃபனிடுங்கள்" என்று கூறினார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "எவரும் தன் வயிற்றை விடத் தீமையான வேறு எந்தப் பாத்திரத்தையும் நிரப்புவதில்லை. ஆதமின் சந்ததிக்கு தன் முதுகெலும்பை நேராக வைப்பதற்கு சில கவளங்களே போதுமானவை." அதாவது, வயிறும் ஒரு பாத்திரம் ஆகும்; அதனை நிரப்பிக்கொண்டே சென்றீர்களாயின், அதில் சீர்கேடே உருவாகிக் கொண்டே செல்லும். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "உங்களுடைய வயிற்றில் மூன்றில் ஒரு பங்கை உண்பதற்காகவும், ஒரு பங்கை (நீர்) அருந்துவதற்காகவும் மற்றும் ஒரு பங்கை சுவாசத்திற்காகவும் வைத்திருங்கள்." இன்றிலிருந்து 1400 ஆண்டுகளுக்கு முன்பு மாநபி (ஸல்) அவர்கள் வழங்கியுள்ள இதே ஆலோசனையத்தான், இரைப்பை உபாதைகளால் அவதிப்படுவோருக்கு மருத்துவர்கள் தற்போது வழங்குகிறார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: எளிய வாழ்க்கையின் காரணமாக மக்கள் இன்னல்களைத் தாங்கிக்கொள்வதற்குப் பழக்கப்பட்டு விடுவார்கள். இதனால், துன்பம் தரும் நாள்கள் வந்தாலும், அவர்கள் துன்பத்தை உணர மாட்டார்கள். அன்னார் மேலும் கூறினார்கள்: 'இன்றைக்கு நாம் பார்க்கிறோம், ஐரோப்பியர்களின் பார்வையில் சிரமங்களாக இருப்பவை நமக்கு அன்றாட வாழ்க்கையின் நிகழ்வுகளாக இருக்கின்றன.' இதை அந்தக் காலத்தில் அன்னார் கூறுகிறார்கள். இன்றும் இதையே நாம் காண்கிறோம். அவர்கள் எவற்றைப் பேரிடர்களாகவும் இன்னல்களாகவும் கருதுகிறார்களோ, அவை நம்மைப் பொறுத்தவரை நிம்மதியான, சௌகரியமான விஷயங்களாக இருக்கின்றன. எனவேதான், அந்த இன்னல்கள் நமக்குத் தெரிவதுகூட இல்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: சில நாள்களுக்கு முன்புதான் என்னிடம் சிலர், 'இப்போது ஆடைகள் கிடைப்பதே சிரமமாக இருக்கிறது' என்றனர். ஆனால், ஒரு முஃமினின் நிலை எப்படியானது என்றால், ஆடை கிடைத்தால் அவர் உடுத்திக் கொள்கிறார்; கிடைக்கவில்லையெனில் பழைய ஆடைகளைத் தையல் போட்டு அணிந்து கொண்டு வாழ்வைக் கழித்துக் கொள்கிறார். மாநபி (ஸல்) அவர்களின் ஆடைகளில் தையல் போடப்பட்டிருந்தனவே, நாம் என்ன அவர்களைவிடப் பெரியவர்களா? நம்மால் நம்முடைய ஆடைகளில் ஒட்டுப் போட்டு அணிந்து கொள்ள முடியாதா?

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: தற்காலத்தில் உலகத்தின் சிக்கல்களில், 'இது கிடைக்கவில்லை; அது கிடைக்கவில்லை' என்றே கூச்சல் எழுகிறது. ஒருவேளை உலகப் போர் துவங்கி விட்டால், பிறகு, இன்னும் அதிகமாக என்ன நிலைமை மோசமாகுமோ தெரியாது. நான் முன்னரும் பலமுறை கூறியிருக்கிறேன், போர் அதிகரிக்கும் சூழல் உருவாகிக் கொண்டே செல்கிறது. போர் இன்னும் விரிவடைந்தால், ஐரோப்பாவும் முழு உலகமுமே உணவு ரீதியில் இக்கட்டான காலகட்டத்தைக் கடக்கும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அன்றைய இந்தியாவை எடுத்துக்காட்டாகக் கூறினார்கள். ஆனால், ஆப்பிரிக்காவிலும், குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளிலும்கூட நிலைமை என்னவென்றால், அவர்களுக்கு எளிய உணவு கிடைத்தால்கூட பெரு மகிழ்ச்சி அடைகிறார்கள். அவர்கள் போரினால் ஏற்படும் நிலைமைகளைத் தாங்கிக் கொள்வார்கள். ஆனால், ஐரோப்பாவாலும் இந்த வளர்ந்த நாடுகளாலும் தாங்கிக் கொள்ள முடியாது. இந்த நிலைமைகள் அவர்களை மிகவும் அதிகமாகக் கவலையில் ஆழ்த்தி விடும்.

எனவே, நாமும் நமது நிலைகளை ஆய்வு செய்துகொண்டே இருக்க வேண்டும்; போதும் என்ற மனப்பாண்மையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். எளிமையான வாழ்க்கையை வாழ முயற்சி செய்ய வேண்டும். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் முன்மாதிரியையும் அந்தக் காலத்தையும் கண்முன்னே நிறுத்திக்கொள்ள வேண்டும். நல்ல பொருள்கள், உணவுகள் கிடைத்தால் தாராளமாக உண்ணுங்கள். நல்ல ஆடைகள் கிடைத்தால் தாராளமாக அணியுங்கள்; ஆனால், அவற்றையே சார்ந்திருந்துவிட்டு, கிடைக்காதபோது செத்தோம் என்று கூச்சலிடுவது தவறான செயலாகும்.

எவ்வாறாயினும், 'எல்லாம் வல்ல அல்லாஹ் உலகத்தை இந்தப் பேரழிவுகளிலிருந்து காப்பாற்றுவானாக!' என்று நாம் துஆவும் செய்ய வேண்டும். தங்களது 'தான்' என்ற அகந்தையின் காரணமாக இவர்கள் அழிவின் பள்ளத்தில் விழ முயற்சி செய்கிறார்கள்; இதே நிலைமைகள் நீடித்தால், உலகப்போர் நிகழ்வது உறுதி! பிறகு, இவர்களின் பேரழிவும் உறுதி! பிறரின் செல்வங்களையும் நிலங்களையும் ஆக்கிரமிப்பதற்குப் பதிலாக, இவர்கள் தங்களது பொது மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும். எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்கும் நன்மைகளில் நிலைத்திருப்பதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: முரப்பி அத்தாவுல் மு.க்னீ)